**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075842

C

1. District மாவட்டம் : கடலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 10/2021 Date: நாள் 29.09.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 and 12 r/w 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 28.09.2021 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.00 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.09.2021 Time நேரம் : 1000 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I Time நேரம் : 1130 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 18 கி.மீ. தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம், ஆலப்பாக்கம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -- District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.ஆனந்தன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முத்துக்குமாரசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் ——— Place of Issue : வழங்கப்பட்ட இடம் ———
(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி எண்.925, நாயுடு தெரு, அகரம் கிராமம், குள்ளஞ்சாவடி, குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) பில் கலெக்டர் பாலமுருகன்
2) மேஸ்திரி சிவபாலன்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் இன்று 29.09.2021 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிலையம் ஆஜர் செய்த கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், குள்ளஞ்சாவடி, அகரம் கிராமம், நாயுடு தெரு, எண்.925 என்ற முகவரியில் வசிக்கும் முத்துக்குமாரசாமி மகன் M.ஆனந்தன் என்பவர், புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் M.ஆனந்தன், (வயது 34), த/பெ, முத்துக்குமரசாமி, எண்.925, நாயுடு தெரு, அகரம் கிராமம், குள்ளஞ்சாவடி, குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர் மாவட்டம்,

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed S. Mala ..... Rank Insp. of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. [signature] S. [signature] 29/9/21.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

29.09.2021.

Name: பெயர் ......................
Rank: நிலை ...................... No. எண் ......................

பெறுநர் இன்ஸ்பெக்டர் அவர்கள் லஞ்ச ஒழிப்பு துறை, கடலூர், கடலூர் மாவட்டம். அய்யா, நான் குறிஞ்சிப்பாடி தாலுகா அகரம் கிராமத்தில் எண்.925, நாயுடு தெருவில் என் குடும்பத்துடன் வசித்து வ்ருகிறேன். எங்களுக்கு சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். எங்களது விவசாய நிலத்தில் நெல் பயிரிட்டேன். எங்கள் நிலத்தில் பயிரிட்ட நெல்லை சுமார் 20 நாட்களுக்கு முன்னர் அறுவடை செய்தேன். அறுவடை செய்த நெல் தோராயமாக சுமார் 40 கிலோ எடை கொண்ட 250 மூட்டைகள் வரும். அதனை நான் மொத்தமாக ஏற்றிக்கொண்டு ஆலப்பாக்கம் ரயில்வே கேட்டுக்கு பக்கத்தில் இயங்கும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு விற்பனைக்காக சுமார் 20 நாட்களுக்கு முன்னரே எடுத்துக்கொண்டு போனேன். அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்தவதற்கு எனது அப்பா முத்துக்குமாரசாமி பெயரிலும், எனது பெயரிலும் அடங்கல் மற்றும் சிட்டா ஆகியவற்றை மணியக்காரரிடமிருந்து பெற்றும் மற்றும்

இதர ஆவணங்களையும் விற்பனைக்காக அங்கிருந்த பில் கலெக்டர் பாலமுருகன் என்பவரிடம் கொடுத்தேன். ஆனால் 20 நாட்களாகியும் நான் கொண்டுச்சென்ற நெல் மூட்டைகளை எடை போடவே இல்லை. ஆனால் எனக்கு பின்னால் கொண்டு வந்த நெல் மூட்டைகளை பணத்தை பெற்றுக்கொண்டு எடை போட்டுக்கொண்டே இருக்கிறார். இதனால் எனது நெல்மூட்டைகள் வெயிலிலும், மழையிலும் கிடந்து வீணாகிக்கொண்டிருக்கிறது. இது சம்மந்தமாக நான் 28.09.2021ந்தேதி மாலை சுமார் 03.00 மணிக்கு அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சென்று அங்கிருந்த பில் கலெக்டர் பாலமுருகனை சந்தித்து என்னுடைய நெல் மூட்டைகளை எப்படியாவது எடை போட்டு எடுத்துக்கொள்ளவேண்டினேன். மேலும் எனது நெல் மூட்டைகள் மழை மற்றும் வெயிலில் கிடந்து வீணாகிப்போயிக்கொண்டிருக்கிற விவரத்தையும் சொன்னேன். அதற்கு மேற்சொன்ன பாலமுருகன் என்னிடம், "நீ உன்பாட்டுக்கு வந்து நெல்மூட்டைகளை கொண்டுவந்து இறக்கிவைத்து விட்டு போயிட்டினா போதுமா, எங்களை கவனிக்க வேண்டாமா, எங்களுக்கு தேவையானதை

செய்தால், உன்னுடைய நெல் மூட்டைகளை உடனே எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்கிறேன் " என்று சொன்னார். அதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று அவரிடம் கேட்டபோது, அதற்கு அவர் மேஸ்திரி சிவபாலன் என்பவரை எனக்கு அடையாளம் காண்பித்து, அவரிடம் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்ற அனைத்து விஷயத்தையும் சொல்லியிருக்கேன், நீ அவர் சொன்னபடி செஞ்சிடு, உடனடியாக உனது மூட்டைகளை எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். நான் அவர் சொன்னபடி மேஸ்திரி சிவபாலனை போய் பார்த்து, அவரிடம் விவரம் சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் "நீங்கள் கொண்டு வந்துள்ள நெல் தோராயமாக 250 மூட்டைகள் வரும் மூட்டைக்கு ரூ.60 வீதம் மொத்தம் ரூ.15,000/– பணம் கொண்டு வந்து கொடுங்க, எடை போட்டு நெல் மூட்டைகளை எடுத்துக்கொள்கிறோம்" என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் இந்த பணம் அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய பணமா என்று கேட்டதற்கு, அவர் இது எங்களுக்கு கொடுக்க வேண்டிய பணம் என்று சொன்னார். நான் அவரிடம் பணத்தை பின்னர் ஏற்பாடு செய்துக்கொண்டு வருவதாக சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். பின்னர் நடந்த விவரத்தை என் நைனாவிடமும் சொன்னேன். பின்னர் நாங்கள் யோசித்து பார்த்ததில் லஞ்சம் கொடுத்து நெல் மூட்டைகளை விற்பனை செய்ய விருப்பமில்லை. எனவே நெல் கொள்முதல் நிலையத்தில் எனது நெல் மூட்டைகளை எடுத்துக்கொள்ள லஞ்சம் கேட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்க நானும், எனது நைனாவும் முடிவு செய்தோம். என் நைனா இது சம்மந்தமாக லஞ்ச ஒழிப்புத்துறைக்கு சென்று புகார் கொடுக்க என்னை சொன்னபடியால் நான் இன்று தங்களிடம் புகார் கொடுக்கிறேன். அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15,000/–த்தையும் கொண்டுவந்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்ட பில் கலெக்டர் பாலமுருகன் மற்றும் மேஸ்திரி சிவபாலன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) M.ஆனந்தன். மேற்படி வாதியின் புகார் மனுவை நான் இன்று 29.09.2021 ஆம் தேதி காலை சுமார் 10.00

மணிக்கு பெற்றேன். மேலும் வாதியின் புகாரில் கூறப்பட்ட குற்றச்சாட்டின் உண்மைத்தன்மை பற்றி விசாரித்ததில் குற்றச்சாட்டு உண்மையென தெரியவருகிறது. மேலும் வாதியின் புகாரில் கூறப்பட்ட குற்ற அலுவலர்களின் நடத்தை பற்றி விசாரிக்க, குற்றச்சாட்டில் முகாந்திரம் இருப்பது தெரியவருகிறது. எனவே, வாதியின் புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டில் பிடிக்கக்கூடிய குற்றத்திற்கான முகாந்திரம் இருப்பதினால், மேல்நடவடிக்கை எடுக்கும்பொருட்டு உத்திரவுபடி நான் இன்று **29.09.2021** ஆம் தேதி காலை **11.30** மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 10/2021, U/s 7 and Sec 12 r/w 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்தேன். மேலும் உத்திரவுபடி வழக்கு கோப்பினை மேல் நடவடிக்கைக்காக கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.S.மாலா அவர்கள் வசம் ஒப்படைத்தேன். இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

A. Shanmugam
29.9.21
(A. SHANMUGAM)